# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 138/2012** **Date:15.10.2025**

**(DW2)- செல்வராஜமணி**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பிவாசாஆ. 2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பிவாசாஆ. 2 ஆவணம் எந்த சர்வே எண்ணின் எத்தனை சென்ட் சொத்திற்கான கிரய பத்திரம் என்றால் சர்வே எண் 215 ஆகும், சென்ட் எத்தனை என்று தெரியாது. மேற்படி ஆவண சொத்தின் எல்கைகள் என்ன என்றால் தெரியாது.மேற்படி பிவாசாஆ.2 ஆவணத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லையென்றால் சரிதான், 3 ம் நபரின் பத்திரமாகும்.

2. மேற்படி பிவாசாஆ. 2 ஆவணத்தை நீதிமன்றத்தில் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் செருப்பங்கோடு ஊர் பக்கத்தில் இருப்பதால் தாக்கல் செய்துள்ளேன். பிவாசாஆ. 2 ஆவணத்தில் சாட்சிகையெழுத்து யார் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பிவாசாஆ. 2 ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்றால் 2021 ம் வருடம் எழுதப்பட்டது. மேற்படி பிவாசாஆ. 2 ஆவணத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் மேற்படி பிவாசாஆ. 2 ஆவணத்திற்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் சரியல்ல.

3. மேற்படி பிவாசாஆ. 2 ஆவணத்தின் உள்ள நபர்களின் அடையாள ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. பிவாசாஆ. 3 ஆவணத்தை பற்றிய எந்த விவரமும் தெரியாது என்றால் தெரியும். பிவாசாஆ. 3 ஆவணம் எந்த தேதியில் யார் யாருக்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. பிவாசாஆ. 3 ஆவணத்திலும் எழுதி கொடுப்பவர் மற்றும் வாங்குபவரின் அடையாள அட்டைகள் இணைக்கப்படவில்லையென்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ. 3 ஆவணத்தில் அவ்வாறு எந்த அடையாள அட்டையும் இணைக்கப்படவில்லையென்றால் இணைக்கப்படவில்லை ( சாட்சி ஆவணத்தை பார்த்து பதிலளிக்கிறார்) .

4. பிவாசாஆ. 3 ஆவணத்தின் தரப்பினர்களில் அடையாள அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னிடம் உள்ளது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். பிவாசாஆ. 3 ஆவணம் எழுதப்பட்ட காலத்தில் எழுதுபவர் எந்த

விலாசம் கொடுக்கிறாரோ அந்த விலாசத்திற்கு தான் பதிவு செய்து கொடுப்பார்கள் என்றால் சாட்சி பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கிறார். பிவாசாஆ.4 ஆவணம் என்ன ஆவணம் என்றால் விலை பத்திரம் ஆகும். பிவாசாஆ.4 ஆவணம் யார் யாருக்கு எப்போது எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சாட்சி பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கிறார்.

5. மேற்படி பிவாசாஆ.4 ஆவணத்திலும் தரப்பினர்களின் அடையாள அட்டை இணைக்கபடவில்லையென்றால் ஞாபகமில்லை. பிவாசாஆ. 6,7,8 ஆவணங்கள் எனது வீட்டிற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இல்லையென்றால் சரிதான், என் குடும்பத்தினரின் ஆவணம் ஆகும். மேற்படி 3 வரைப்படங்களை யார் தயார் செய்தார்கள் என்றால் தெரியாது. மேற்படி பிவாசாஆ. 6,7,8 ஆவணங்களில் செருப்பங்கோடு என்று அரசாங்க முத்திரையில்லையென்றால் சரிதான், அரசாங்க முத்திரை உள்ளது, ஆனால் செருப்பங்கோடு என்று இல்லை ( சாட்சி ஆவணத்தை பார்த்து பதிலளிக்கிறார்) .

6. பிவாசாஆ. 9 ஆவணத்தில் வரி செலுத்தியவரின் கையொப்பமில்லையென்றால் சரிதான். செல்லத்துரை என்பவரின் வீட்டின் கதவு எண் என்ன என்றால் அது பற்றி தெரியாது. சுதாகர் என்பரின் வீட்டின் கதவு எண் என்ன என்றால் அது பற்றி தெரியாது. சுதாகர் பெயரில் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ. 9, 10 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்த பின்பு தேதியிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பிவாசாஆ 10 ஆவணத்தில் ஊரின் பெயர் குறிப்பிடவில்லையென்றால் குறிப்பிடவில்லை ( சாட்சி ஆவணத்தை பார்த்து பதிலளிக்கிறார்) .

7. பிவாசாஆ 11 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த பின் தேதியிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பிவாசாஆ 12 ஆவணத்தில் வழக்கு தாக்கல் செய்த பின் தேதியிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பிவாசாஆ 13 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த பின் தேதியிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பிவாசாஆ 13 ஆவணத்தில் செருப்பங்கோடு என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 14 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த பின் தேதியிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பிவாசாஆ 15 ஆவணம் வழக்கு தாக்கல் செய்த பின் தேதியிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். பிவாசாஆ 16 ஆவணத்தில் செருப்பங்கோடு என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் செருப்பங்கோடு மேற்கு என்று குறிப்பிடவில்லையென்றாலும் சரிதான். மேற்படி ஆவணமும் வழக்கு தாக்கல் செய்த பின் தேதியிட்ட ஆவணங்கள் என்றால் சரிதான்.

8. பிவாசாஆ 17 உத்தரவு ஆவணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் பி டி ஓ அலுவலத்திலிருந்து கிடைத்தது. மேற்படி ஆவணத்தில் எனது பெயரில்லையென்றால் சரிதான், மனு கொடுத்து வாங்கினேன். எப்போது மனு கொடுத்து வாங்கினேன் என்ற விவரம் மனுவில் துலங்கவில்லையென்றால் சரியல்ல, ரவீந்திரனிடம் உள்ளது. பிவாசாஆ 17 உத்தரவு பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் மேற்படி பிவாசாஆ 17 ஆவணத்தை பற்றி சாட்சியமளிக்க எனக்கு எந்த முகாந்திரமுமில்லையென்றாலும் சரியல்ல.

9. பிவாசாஆ 18 உயர்நீதிமன்ற உத்தரவின் மீது உயர்நீதிமன்றத்தால் வேறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றாலும் எனவே பிவாசாஆ. 18 ஆவணம் செல்லாது என்றாலும் அது பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் சரியல்ல. பிவாசாஆ 19 ஆவணத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் எனவே பிவாசாஆ 19 ஆவணத்தை பற்றி சாட்சியமளிக்க எனக்கு எந்த முகாந்திரமுமில்லையென்றாலும் சரியல்ல. பிவாசாஆ 20 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விழா நடந்த சமயத்தில் நான் ஏதும் பொறுப்பில் இருந்தேனா என்றால் தலைவர் பொறுப்பில் இருந்தேன். எனது பெயர் மேற்படி ஆவணத்தில் துலங்காது என்றால் சரிதான், விழா கமிட்டியினரின் பெயரை தான் குறிப்பிடுவார்கள். மேற்படி ஆவணத்தில் செருப்பங்கோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் செருப்பங்கோடு மேற்கு என்று குறிப்பிடவில்லையென்றாலும் சரிதான்.

10. செருப்பங்கோடு என்பது கட்டிமாங்கோடு என்ற ஊராட்சிக்குட்பட்டது என்றால் சரிதான், நெட்டாங்கோடு பஞ்சாயத்திலும் உள்ளது. நெட்டாங்கோடு பஞ்சாயத்தில் செருப்பங்கோடு ஊர் உள்ளது என்பதை காட்ட அரசு ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அங்கு அரசாங்கம் ஒரு பெயர் பலகை வைத்துள்ளது. நான் கூறுவது போல் எந்த பெயர் பலகையும் கிடையாது என்றாலும் எந்த அரசு ஆவணமும் இல்லையென்றாலும் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ. 21 ஆவணம் எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி கேள்விக்கு சம்பந்தமில்லாமல் பதிலளிக்கிறார் (சாட்சி ஆவணத்தை பார்த்து பதிலளிக்கிறார்) . மேற்படி ஆவணத்தில் செருப்பங்கோடு என்று குறிப்பிடவில்லையென்றால் சாட்சி மீண்டும் கேள்விக்கு சம்பந்தமில்லாமல்

பதிலளிக்கிறார், திருவிழாவின் அனுமதி கடிதம் என்று கூறுகிறார். பிவாசாஆ 22 ஆவணத்திலும் செருப்பங்கோடு என்ற ஊரின் பெயர் குறிப்பிடவில்லையென்றால் செருப்பங்கோடு கோவிலின் தீர்மானம் ஆகும், செருப்பங்கோடு என்று குறிப்பிடவில்லை.

12. பிவாசாஆ 23 ஆவணத்திற்கும் அரசாங்க பதிவேட்டிற்கும் எந்த சம்பந்தமுமில்லையென்றால் சரிதான். மேற்படி பிவாசாஆ 23 ஆவணம் வழக்கிற்கு பின்பு தேதியிட்ட ஆவணம் என்றால் சரிதான். பிவாசாஆ 24 ஆவணமும் வழக்கிற்கு பின்பு தேதியிட்ட ஆவணம் என்றால் சரிதான். பிவாசாஆ 24 ஆவணத்தில் செருப்பங்கோடு மேற்கு என்று குறிப்பிடவில்லையென்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 22.10.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்